www.kalvisolai.com

# மேல்நிலை முதலாம் ஆண்டு

# பொதுத் தமிழ் – முதல் தாள்

# மாதிரி வினாத்தாள்

**நேரம்** : 2.30 மணி மதிப்பெண்: **90**

## பகுதி – I

**உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 20 x 1 = 20

1. தமிழ் மொழியின் உபநிடதம் எனப்படும் நூல்
   அ. நாமக்கல் கவிஞர் பாடல்கள் ஆ. தாயுமானவர் பாடல்கள் இ. பாரதியார் பாடல்கள்

2. பாரதியார் மொழி பெயர்த்த நூல்
   அ. இராமாயணம் ஆ. பாரதம் இ. கீதை

3. அகமும் புறமும் கலந்த இலக்கியம்
   அ. புறநானூறு ஆ. பதிற்றுப்பத்து இ. பரிபாடல்

4. நுந்தை என்பதன் இலக்கணக் குறிப்பு
   அ. வினைத்தொகை ஆ. மரூஉமொழி இ. ஒருபொருட்பன்மொழி

5. களிற்றுயானை நிரையில் உள்ள பாடல்கள்
   அ. 180 ஆ. 100 இ. 120

6. காலமறிதலுக்கு வள்ளுவர் உவமையாகக் கூறும் பறவை
   அ. காக்கை ஆ. புறா இ. கொக்கு

7. அடக்கம் -------- உய்க்கும்
   அ. மேலோகத்துள் ஆ. அமரருள் இ. பூலோகத்துள்

8. நபிகள் நாயகத்தின் வரலாற்றைக் கூறும் நூல்
   அ. சின்ன சீறா ஆ. தேம்பாவணி இ. ஆசிய ஜோதி

9. சீவகன் புதிதாக, கோட்டையை நிறுவிய இடம்
அ. புதுக்கோட்டை ஆ. மதுரை இ. திருநெல்வேலி

10. மதிமுகம் என்பதன் இலக்கணக் குறிப்பு
அ. பண்புத்தொகை ஆ. உவமைத்தொகை இ. வினைத்தொகை

11. சீவகனின் தாய்
அ. விசயை ஆ. வீணாபதி இ. தத்தை

12. பகல் வெல்லும் ------- காக்கை இகல் வெல்லும்
அ. மயிலைக் ஆ. குயிலைக் இ. கூகையைக்

13. சிற்றிலக்கியங்களின் எண்ணிக்கை
அ. 96 ஆ. 106 இ. 86

14. முதற்குலோத்துங்கச் சோழனுடைய அவைக்களப் புலவர்
அ. தொண்டைமான் ஆ. செயங்கொண்டார் இ. சீத்தலைச்சாத்தானார்

15. முத்துக்குமாரசுவாமி பிள்ளைத் தமிழைப் பாடியவர்
அ. குமரகுருபரர் ஆ. பெருந்தேவனார் இ. பரணர்

16. சிறுகூடல்பட்டியின் பாட்டுப் பறவை
அ. பாரதிதாசன் ஆ. வாணிதாசன் இ. கண்ணதாசன்

17. சாகித்ய அகாதெமி பரிசு பெற்ற பாரதிதாசனின் நாடக நூல்
அ. பிசிராந்தையார் ஆ. குறிஞ்சித் திட்டு இ. அழகின்சிரிப்பு

18. பெரியாழ்வாரின் வளர்ப்பு மகள்
அ. திலகவதியார் ஆ. ஔவையார் இ. ஆண்டாள்

19. சுந்தரர் தேவாரம் என்பது
அ. ஏழாந்திருமுறை ஆ. மூன்றாம் திருமுறை இ. இரண்டாம் திருமுறை

20. குளுகுளுவென்று – இலக்கணக் குறிப்பு
அ. அடுக்குத்தொடர் ஆ. இரட்டைக்கிளவி இ. உரிச்சொல்தொடர்

## பகுதி - II

**பின்வரும் வினாக்களுள் வினா எண் 30க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 21 முதல் 29 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக** 7 x 2 = 14

21. பாரதியாரின் முப்பெருங்காப்பியங்கள் யாவை?

22. பேகனைப் பரணர் எவ்வாறு புகழ்கிறார்?

23. பிரித்து எழுதி, பகுபத உறுப்பிலக்கணம் தருக.
பொழிந்து , அசைத்த

24. "ஒருமையுள் .." எனத் தொடங்கும் குறட்பாவை எழுதுக.

25. சொற்களைப் பிரித்து எழுதி பகுபத உறுப்பிலக்கணம் தருக
1. ஆடுக 2. அமைத்தல்

26. சீறாப்புராணம் எத்தனை காண்டங்களை உடையது? அவை யாவை?

27. புதுமை எவ்வாறு இருக்க வேண்டும் என்று கவிஞர் முடியரசன் விரும்புகிறார்?

28. குறவஞ்சி – நூலின் பொது அமைப்பை எழுதுக.

29. பாணர் என்று கூறிப் பிழைத்தாரின் செயல் யாது?

30. "கடை" என முடியும் குறட்பாவை அடிமாறாமல் எழுதுக

## பகுதி - III

**பின்வரும் வினாக்களுள் வினா எண் 40க்கு கட்டாயம் விடையளிக்க வேண்டும். மீதமுள்ள 31 முதல் 39 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு மட்டும் விடை தருக.** 7 x 3 = 21

31. தமிழ்த்தாயின் பெருமைகளாக நீ.கந்தசாமிப் புலவர் கூறுவன யாவை?

www.kalvisolai.com

32. புறநானூற்றால் நீவிர் அறிவன யாவை ?

33. நாவடக்கம் பற்றி திருவள்ளுவர் கூறுவன யாவை ?

34. சீவகன் நன்றெனக் கண்ட யாழின் சிறப்புகளைத் தொகுத்து எழுதுக.

35. பாம்பின் செயலும், அபூபக்கரின் செய்கையும் பற்றி விளக்குக?

36. தண்ணீர் வங்கிகள் என்ற தலைப்பின்கீழ் ஆசிரியர் உரைப்பன யாவை ?

37. அகநானூறு – திணை வைப்பு முறையைக் கூறுக.

38. புத்தகச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் பற்றி பாவேந்தர் உரைப்பன யாவை?

39. இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக
நரம்பொடு வீணை நாவின் நடந்ததோ ?

40. புணர்ச்சி விதி தருக.
1. துன்பமில்லை , 2. நுனிக்கொம்பர்

## பகுதி - IV

IV. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 7 x 5= 35

41. அடக்கத்தின் சிறப்பு குறித்து வள்ளுவர் கூறுவன யாவை ?
(அல்லது)
காலமறிதலின் பயன்குறித்து வள்ளுவர் கூறுவன யாவை ?

42. நபிகள் பெருமான் பாம்பிடம் வினவியதும் பாம்பின் மறுமொழியும் யாவை ?
(அல்லது)
நாளெல்லாம் நன்றொலிக்கும் பாட்டுகளாகப் பாரதியார் கூறுவன யாவை ?

43. அழகர்தம் சிறப்புகளாக பலபட்டடைச் சொக்கநாதபிள்ளை உரைப்பன யாவை ?
(அல்லது)
பாடாண் திணையைச் சான்றுடன் விளக்குக.

44. வேற்றுமை அணியின் இலக்கணம் கூறி சான்றுடன் விளக்குக.

(அல்லது)

பிறிது மொழிதல் அணியைச் சான்றுடன் விளக்குக.

45. தளை என்றும் பாடல் மூலம் கவிஞர் உணர்த்த விரும்பும் கருத்துகள் யாவை ?

(அல்லது)

அப்பர் பெருமான் பெருமிதத்துடன் பாடிய பாடற் கருத்தை விளக்குக.

46. செலவுணர்த்திய தோழிக்குத் தலைமகள் சொல்லியவற்றை விளக்குக.

(அல்லது)

சீவகன் காந்தருவதத்தையை யாழ்ப்போட்டியில் வென்ற நிகழ்ச்சியைத் தொகுத்து எழுதுக.

47. “அருள்பழுத்த……..“ எனத் தொடங்கும் இறைவாழ்த்துப் பாடலை அடிபிறழாமல் எழுதி அதன் பா வகை சுட்டுக.

(அல்லது)

“வரைக்கலிங்கர்………“ எனத் தொடங்கும் கலிங்கத்துப் பரணி பாடலின் முதல் நான்கு வரிகளை மட்டும் எழுதி அதன் பா வகை சுட்டுக.

------